# மரணப் படுக்கையில் வீழ்ந்திருக்கும் தந்தையிடமிருந்து அன்பு மைந்தனுக்கு ஓர் கடிதம்

மாணவன் இஸ்ஹாக் ஆண்டு - 4)

ஆயுள் முழுவதையும் கழித்துவிட்டு அணுவணுவாக இறந்துகொண்டிருக்கு தந்தையிடமிருந்து ஒரு மைந்தனுக்கு செல்லும் ஒரு கடிதம் என் அடிமனதில் பொங் எழும் எண்ணங்களும் உலக வாழ்வில் எனக்கு ஏற்பட்ட வெறுப்பும் என்னை இப் எழுத வைத்தது.

உலகத்தைப் பற்றி நான் நன்கு அறிகிறேன் மக்களை மயக்கும் அதன் சக்தியு நல்லவர்களை மயக்கும் அதன் ஆற்றலும் எனக்கு நன்றாகத் தெரிகின்றது இம்மையை உதறித் தள்ளிவிட்டு புறப்பட வேண்டிய இந்நேரத்தில் அன்ப மகனே உன்னைப் பற்றிய கவலை எனக்கு வரத்தான் செய்கிறது. நான் இருந்தாலும் இறந்தாலும் நேரிய வழியில் நீ செல்ல வேண்டும் என்பதற்காகவே இப்பணியி ஈடுபடுகிறேன்.

அன்பு மகனே! நாம் வசிக்கும் இந்த இடம் ஒரு பிரேதச் சத்திரம் அதற்கடியி இருப்பவர்கள் செத்துப்போனவர்கள் அதன் மேல் நடமாடுபவர்கள் விரைவில் செத்து போகக்கூடியவர்கள். நிலையற்ற இந்த உலகில் நிறைவேறா ஆசைகளை மனதி ஏந்தி மறைந்து போனவர்கள் பலர் அவர்களைப் போல் நாமும் ஒரு நாள் இறந்து தா ஆக வேண்டும் இந்த நியதியை யாராலும் மாற்றவும் முடியாது. உலக வரலாற்றி இதை எவரும் மாற்றியதில்லை.

அன்பு மகனே! மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயிக்கப்பட்ட ஒன்று அ அடிக்கடி எவருக்கும் குறுக்கிடுவதில்லை அதனை வென்றவர் எவருமில்லை பிறந்தவர்கள் என்றாகிலும் இறந்துதான் ஆக வேண்டும் அறிவும் ஆற்றலும் பெற் அகிலத்தை ஆட்டிப்படைக்க நினைக்கும் மனிதன் எந்த நிலையில் இருக்கிறா என்பதை எண்ணிப்பார். உனக்கு முன் எத்தனை கோடிப் பேர் பிறந்தார்க ஆடம்பரமாக வாழ்ந்து வானளவு மாளிகைகள் எழுப்பினார்கள் மரணமாவ மண்ணாவது என்று வாதாடினார்கள் ஆனால் அவர்கள் இப்போது எங்கு மறைந்தார்க அவர்கள் எழுப்பிய மாளிகைகள் சிதைந்த சின்னங்களாக இருக்கின்றன. மரணத்தி கோரத் தாக்குதலால் அவர்களால் தப்ப முடியவில்லை. மாளிகை வாழ்வைத் துறந் மண் குழியில் புதைந்துவிட்டார்கள். அவர்களைப் போல் நீயும் நடக்கக்கூடாது உ எதிர்காலத்தை எண்ணிப்பார். மரணத்தின் பின் செல்லவேண்டிய இடத்தை சிந்தித்துப்பார். மறுமைக்கான செயல்களில் முழு மூச்சோடு ஈடுபடு. எச்சரிக்கிறேன் மறுமையைப் புரக்கணித்துவிட்டு இம்மையை தேர்ந்தெடுத்துவிடாதே. அன்பு மகனே முன்னோரின் அடிச்சுவடுகள் நமக்குச் சிறந்த அறிவுரைகள் தருகின்றன. அவர்களின் வாழ்வில் எத்தனையோ தத்துவங்கள் தெரிகின்றன. அவர்களின் வாழ்வு உனக்கு படிப்பினை தரவேண்டும் அவர்களின் அனுபவங்கள் உன் வாழ்வுக்கு ஒளி காட்ட வேண்டும். அன்பு மகனே! உனக்கு நான் அறிவுரை கூற நினைத்தபோது என் மனதில் திருக்குர்ஆனும் அதன் கருத்துக்களுமே நிறைந்திருந்தன அவைகள்தான் உனக்கு நான் சாறு பிழிகிறேன். மகனே! எச்சரிக்கிறேன் நம்மைச்சுற்றி இருப்பவர்களைப்பற்றி எண்ணிப்பார் தம்மை முஸ்லிம் என்று செல்லும் அவர்கள் நம் கருத்திற்கும் நலத்திற்கும் சாதகமாக குர்ஆனிற்கு பொருள் கொடுக்கின்றனர் இருக்கும் கருத்தை இல்லையென்றும், இல்லாத கருத்தை உண்டு எனவும் விரிவுரை செய்கின்றனர். மொதத்தில் அவர்கள் தெளிவிழந்திருக்கின்றனர்.

அவர்களின் மனப்பான்மை அவர்களிடம் இருக்கட்டும் அது உன்னிடம் வந்துவிடக்கூடாது. மகனே! நீ நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும் நீ எடுத்து நடக்கவேண்டிய அறிவுரைகளில் முக்கியத்துவம் நிறைந்தது இறையச்சமாகும். மற்றஎதையும்விட இதில் நீ அக்கறை காட்டவேண்டும் இறைபணியில் என்றைக்கும் குறைவைக்காதே அல்லாஹ் பற்றிய சிந்தனை உன் மனதில் என்றும் இருக்க வேண்டும் அது புனிதமானது சிறப்புமிக்கது அவனுக்கும் அடியானுக்கும் மத்தியிலுள்ள மகத்தான தொடர்பு அது அதைவிட மகத்தானது எங்கும் கிடையாது. அன்பு மகனே மனிதனின் முன்னேற்றங்கள் அத்தனைக்கும் நம்பிக்கையே அடிப்படை இழந்தவர்கள் உலக வரலாற்றில் முன்னேறியது கிடையாது. அசையாத நம்பிக்கைக்கு உன் மனதில் இடம்கொடு மனதில் பட்டதையெல்லாம் செய்ய ஆரம்பித்துவிடாதே எதிர்பட்டிருக்கும் பிரச்சினைக்கு உடனுக்குடன் முடிவு கட்டாதே நீ செல்லும் வழியை எண்ணிப்பார். அதில் விபரீதம் ஏற்படும் என்று தோன்றினால் அந்த வழியில் செல்லாதே வாழ்வில் கண்ணை மூடிக்கொண்டு நடப்பவர்கள் இறுதியில் கண்ணீர் விட்டு கதறவேண்டி ஏற்படும் நற்காரியங்களின் பிறப்பிடமாக இரு உன் ஆற்றல் அறிவு திறமை எல்லாம் ஒன்று திரட்டி தீமையை எதிர்த்துப் போராடு. அன்பு மகனே! மனதின் குணங்களில் பொறுமைக்கு உயர்ந்த இடமுண்டு. திருக்குர்ஆனில் பொறுமையை உண்டு. எனவே இன்பத்தில் மட்டுமின்றி துன்பத்திலும் நீ பொறுக்க வேண்டும் உன் பிரச்சினைகள், கவலைகள், அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிடு உன் தேவையை அவன் நன்கறிந்தவன். துன்பம் ஏற்படும் போது கதறியழுவது இறைபக்தர்களுக்கு அழகல்ல.

அன்பு மகனே! உன் அறியாமையை திரைபோட்டு மறைக்கவேண்டிய அவசியமில்லை. உன்னுடைய பலவீனத்தை மூடி மழுப்பவேண்டிய தேவையில்லை ஏனென்றால் நீ அறியாமையின் அரவணைப்பிலும் பலவீனத்தின் பக்கத்துணையுடனும் தான் மண்ணகத்தில் கால்வைத்தாய். அன்பு மகனே! இறைவன் ஒருவன் என்பது நம்கொள்கை வணக்கத்திற்குரியவனும் அவனே என்பதும் நம் சித்தாந்தம் அனைத்தையும் படைத்து ஆளுகின்றவன் ஒருவனாகத்தான் இருக்கவேண்டும் அவனைத் தவிர்ந்து மற்றொருவன் இருந்தால் முதல்வனைப்போல் இரண்டாமவனும் திருத்தூதர்களை அனுப்பியிருப்பான் ஒரு தூதர் ஏகத்துவத்தை போதிக்கும் போதெல்லாம் மற்றொரு திருத்தூதர் இல்லை அது தவறு இரண்டு இறைவன் இருக்கிறார்கள் என்று பிரச்சாரம் செய்திருப்பார் எனவே ஒன்றுக்கு மேற்பட்ட இறைவன்கள் என்றைக்கும் இருக்கவே முடியாது. இருப்பதெல்லாம் ஒரு இறைவன்தான்.

அன்பு மகனே! உனக்கென்று எதை நீ விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு. யாரையும் அநீதிக்கு உட்படுத்தாதே. மற்றவர்கள் உனக்கு நல்லது செய்யவேண்டும் என்று விரும்புகிறாயா? முதலில் நீ அவர்களுக்கு செய்துகாட்டு அப்போதுதான் அவர்கள் பெற்றதைத் திருப்பித் தருவார்கள். குறைவாக பேசு தெரிந்ததைப் பேசு சரிவரத் தெரியாமல் எதைப்பற்றியும் ஒரு வார்த்தைகூட பேசாதே அது உன் அறியாமைக்கு விளக்கம் கொடுத்துவிடும்.

அன்பு மகனே! மனிதனின் குணங்களில் தற்பெருமையும் ஒன்று அ
நல்லவர்களை கெடுக்கும் ஆற்றல் படைத்தது நீ நல்லவனாக இருக்க ஆசைப்பட்டா
இந்தக் குணத்தை கட்டோடு பிடுங்கி எறிந்துவிடு. பண மூட்டைகளுக்கு அதிகாரியா
வேண்டும் என்று ஆசைப்படாதே. நீ இறந்தபின் செல்வத்தையெல்லாம் யார் யாரே
வந்து பங்குபோடுவார்கள். திரண்ட செல்வம் காலடியில் இருக்கிறதா அதனை வா
எடுத்து இறைவழிக்கு செலவு செய். பணத்திற்காக பண்பையும், பகுத்தறிவையு
இழந்துவிடாதே. உன் தேவைக்காக படைக்கப்பட்ட பணத்திற்கு நீ அடிமையா
விடாதே.

அன்பு மகனே! நாவை இருகப்பிடித்துக்கொள் தேவையில்லாமல் அதற்
இயக்கம் கொடுக்காதே நல்லவர்களிடம் நட்புவைத்துக்கொள் அது உன்னை
நல்லவனாக்கிவிடும். தீயவர்களுடன் தொடர்பு வைக்காதே இது உ
கண்ணியத்தையும் ஒழுக்கத்தையும் கெடுத்துவிடும் நீ பலசாலியாக இருக்கலா
வீரத்திற்கும் துணிச்சலிற்கும் நீயே உதாரணமாக இருக்கலாம். அதற்காக உனக்கு
கீழ் உள்ளவர்களுக்குத் தீங்கு செய்துவிடாதே.

அன்பு மகனே! இறுதியாக சதாவும் உன்னிடம் இருக்கவேண்டி
ஆயுதத்தைப்பற்றிச் சொல்கிறேன். உன் சகல பிரச்சினைகளுக்கும் பிரார்த்தனை என்
வாளால் தீர்வு சொல். உன்னை சூழ்ந்திருக்கும் துன்பங்களை கலைத்தெரியுமாறு
பிரார்த்தித்துப் பார். உடன் பதில் சொல்லும் மகாதயாளன் அவன் நிறைந்
வேதனையோடு குமுறும் இதயத்தோடு அவனை அழை அதற்காக விண்தெரிக்
அலறுவது என்று அர்த்தமல்ல.

அன்பு மகனே! இறப்பதற்கு முன் உனக்குச் சில அறிவுரைகள் கூறிவி
வேண்டும் எனும் எண்ணத்துடனையே இதை நான் எழுதினேன் என் வார்த்தைக்கு உ
இதயத்தைத் திறந்திருக்கிறாயா அல்லது முதலிலேயே தீய எண்ணங்களுக்கு
துர்போதனைகளுக்கும் இடம்கொடுத்துவிட்டாயா? அப்படியானால் என் அறிவுர
உனக்கு நன்மை செய்யாது உலக ஆசாபாசம் நிறைந்திருக்கும் உள்ளத்தி
நல்லறிவுரைகளுக்கு இடமே கிடையாது.

அன்பு மகனே! நான் கூறியதை நன்கு புரிந்து செயலாற்று உனக்
இம்மையிலும் மறுமையிலும் நல்லது செய்யவேண்டுமென வல்ல நாயனை
கெஞ்சுகிறேன்.

## நாம் எவ்வகை ?

ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:
மனிதர்கள் மூன்று வகைப்படுவார்கள்.

1. பூரணமான மனிதன் - அவனிடம் சுய சிந்தனை இருப்பதுடன் அவன் பிறர் ஆலோசனையும் பெறுபவன்.
2. அரை மனிதன் - அவனிடம் சுய சிந்தனை உண்டு. அவன் பிறர் ஆலோசனையைப் பெறுவதில்லை.
3. அவன் மனிதனே அல்ல - அவனிடம் சுய சிந்தனையுமில்லை. பிறரிடம் அவன் ஆலோசனை கேட்பதுமில்லை.